10.15 மணி [1990 சனவரி 19

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகிரி ஒரு தாலுக்காவாக இருக்கிறது. சுமார் 30,000 ஜனத்தொகை உள்ள இடம். அருகாமையில் 10, 15 கிராமத்து மக்கள் அந்தத் தாலூக்காவிற்கு வரக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே சிவகிரியில் தாலுக்கா அரசு மருத்துவமனை வருவதற்காக நான் ஏற்கெனவே அமைச்சர் அவர்களுக்கு மனுச்செய்திருக்கிறேன். அந்தத்தாலுக்கா மருத்துவமனையில் அனைத்து மருத்துவப் பிரிவுகளும் இருக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து மனுச் செய்திருக்கிறேன். ஆனால் அமைச்சரவர்கள் செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லையென்று சொல்கிறார்கள். ஆகவே வருகிற நிதியாண்டிலாவது சிவகிரி தாலுக்காவில் ஒரு அரசு மருத்துவ மனையை அனைத்து மருத்துவப் பிரிவுகளையும் கொண்டதாக ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு நிதிநிலையைக் கருத்தில் கொண்டு பரிசீலிக்கும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மிக்க நன்றி.

(விடை—இல்லை.)

இராசபாளையம் நகருக்குக் குடிநீர் வசதி.

* 3114. திரு. வி. பி. இராசன் :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராசபாளையம் நகரில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்போது நிறைவு பெறும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ). ஒரு நபருக்கு நாளொன்றுக்கு 57 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகிக்க வகை செய்யப்பட்ட ஒரு குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ஆய்வில் உள்ளது. ஆய்வு முடிந்த பின் செயலாக்கத்திற்கு எடுக்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி திட்டத்தின் உத்தேச மதிப்பீடுகள் இறுதியாக்குதல் மார்ச் 1990-ல் முடிவடையும்.

1990 சனவரி 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்.

(அ) தஞ்சை மாவட்டத்திலுள்ள கரும்புப் பண்ணைக் கழக நிலங்களை நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்குவது குறித்து.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் மூலமாக அமைச்சருடைய கவனத்திற்கு இந்த விஷயத்தைக் கொண்டு வர விரும்புகிறேன். தஞ்சாவூர் மாவட்டம் வடபாதிமங்கலத்திலிருந்த கரும்புப் பண்ணை கலைக்கப்பட்டதனால் உள்ள நிலத்தை வினியோகிப்பதற்கு எடுத்துள்ள நடவடிக்கையில் தலா ஒரு நபருக்கு 3/4 ஏக்கர் வீதம் அந்த நிலத்தை வினியோகிக்கலாம் என்று அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சர்வோதயத் தலைவர் திரு. ஜகன்னாதன் அவர்கள் கடந்த மூன்று நாட்களாக அதை உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ், அந்த விதியின் கீழ் $1\frac{1}{2}$ ஏக்கர் வழங்க வேண்டுமென்று உண்ணாவிரதம் இருந்து வருகிறார். அந்த நிலத்தைப் பெறக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள் மத்தியில் இரு தரப்பட்ட நிலை இருக்கிறது. ஒரே ஊரில் இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களாக இருந்தாலும், ஒரு சாரார் நிரந்தரமாக அந்தக் கரும்புப் பண்ணைக் கழகத்திலே பணியாற்றிய விவசாயத் தொழிலாளர்கள். இன்னொரு சாரார் அந்தக் கரும்புப் பண்ணைக் கழகத்திற்கு வெளியிலிருந்த தொழிலாளர்கள். அந்த இரு சாராரும் அந்த நிலத்தைப் பெறும்பொழுது அவர்களுக்குச் சமமாக 3/4 ஏக்கர் வீதம் பெறும்பொழுது, நிரந்தரமாக இருந்தவர்களுக்கு நிலம் கொஞ்சம் கூடுதலாகக் கிடைக்கலாமே என்ற ஒரு ஆதங்கம் இருக்கிறது. அந்த ஆதங்கத்தை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். எனவே அந்த விவசாயத் தொழிலாளர்களுடைய மனக் குறையை கவனத்தில் எடுத்துக்கொண்டு, அதை இரு சாரார்களுக்கும் ஒரே மாதிரி இல்லாமல், அதிலே வேறுபாடு செய்து, நிரந்தரமாக இருந்தவர்களுக்கும், வெளியிலே இருந்தவர்களுக்கும் வித்தியாசப்படுத்தி, அந்த நிலங்களை வினியோகிக்கக் கூடிய முறையில் அரசு ஒரு தீர்வு கண்டு, இந்தப் பிரச்சினையை முடிவிற்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்து, ஜகன்னாதன் அவர்களுடைய உண்ணாவிரதத்தை ஒரு முடிவிற்குக் கொண்டு வர அரசு முயற்சி செய்யுமா என உங்களின் மூலமாக முதலமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.